[22nd April 1960

May I also know whether the Government will take into consideration the fact that Kanyakumari is the only district in the State where there is no railway line at all and so give high priority to that line?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, for some of these lines, survey has been made. Sometimes, re-survey is necessary. But, I have no information about the cost of survey that has been made. It is true that in the Kanyakumari district there are no railway lines, but that will not be the only consideration for giving certain priorities for that proposal.

SRI M. K. SOMASUNDARAM : திருநெல்வேலி—கன்யாகுமரி ரயில்வே லைன் போடுவதற்கு பஸ் சொந்தக்காரர்களின் எதிர்ப்பு இருப்பதால், அதற்கு முதலிடம் கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா? அப்படியானால், பொது மக்களுடைய வசதியை உத்தேசித்து, அதற்கு முதலிடம் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : திருநெல்வேலியிலிருந்து கன்யாகுமரி வரைக்கும் நல்ல ரோடு இருக்கிறது. சர்க்கார் நடத்தும் பஸ்-ஸர்வீசும் இருக்கிறது. அது ஒரு காரணம் தான். இருந்தாலும் காசியிலிருந்து கன்யாகுமரி வரைக்கும் நாஷனல் ஹைவேயைப் போல, ரயில்வேயைப் பொறுத்தும், தூரத்திலிருந்து வருகிறவர்கள் ஏதோ திருநெல்வேலியில் இறங்கி பஸ்ஸிலே கன்யாகுமரி போகவேண்டிய நிமித்தம் இருப்பதால், அதற்கு ஹையஸ்ட் ப்ரையாரிடி கொடுக்கவேண்டும் என்பதற்காக முயற்சி செய்கிறோம்.

SRI A. GOVINDASAMY : தொழில் வளர்ந்திருக்கும் பகுதிகளில் புதிதாக ரயில் பாதைகள் போடப்படும் என்ற கருத்தை மத்திய அரசாங்கம் தெரிவித்திருக்கிறார்கள். இருந்தும், தொழில்கள் வளரக்கூடிய பகுதிகளில் ரயில் பாதைகளைப் போடாமல் காலதாமதப் படுத்துவதற்குக் காரணம் என்ன ? அதை நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்தி, குறிப்பிட்ட ஏழு வேலைகளையாவது துரிதமாக எடுத்து நடத்துவதற்கு முயற்சி செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தொழில் வளர்ச்சி அடைகிற இடங்களில் ரயில் பாதைகள் போட்டு அதற்கு வசதி அளிக்கும் முறையில் அமைக்க வேண்டும், முதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை நாம் புறக்கணிக்க முடியாது. ஆனால் இங்கும் தொழில் வளர்ச்சி இல்லாமல் இல்லை. மற்ற அவசியமும் இருக்கிறது. இதையெல்லாம் எடுத்துக் காட்டித் தான் நாம் வலியுறுத்திக் கொண்டு வருகிறோம்.

Pilgrim tax

* 796 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) காஞ்சீபுரத்தை ஆண்டு பூராவும் பிரயாணிகள் ஸ்தலமாக்கி பிரயாணிகள் வரி வசூலிக்க அனுமதிக்க வேண்டுமென்று கோரி நகராட்சி மன்றத்தின் தீர்மானம் சர்க்காருக்கு வந்ததா ?

(ஆ) அப்படியானால், இதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: (*a*) Yes, Sir.

(*b*) The matter is under correspondence with the Government of India.